RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22428

# தமிழ் இலக்கியங்களில் காணலாகும் அடித்தள மக்களின் வாழ்க்கை

## ரா. வினோதினி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அப்பல்லோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) சென்னை-600123, தமிழ்நாடு, இந்தியா.

# The lives of the underprivileged people found in Tamil literature

## R. Vinothini [a, *]

[a] Department of Tamil, Apollo Arts and Science College, (Affliated to University of Madras) Chennai-602105, Tamil Nadu, India

* Corresponding Author:
h2onakshathra@gmail.com

Received: 05-07-2022
Revised: 23-09-2022
Accepted: 02-10-2022
Published: 15-10-2022

### ABSTRACT

It is an undetermined rule that all beings that have arisen in this world must be respected equally. There is no one who has adhered to such a canon. Inequality between every living being that can live in this world is a fundamental matter of nature. The beginning of inequality is the definition that he should and should not do even the most common activities in the world. We can identify such a preliminary difference in the Tolkappiyam itself. People like errand runner and Panar, who works for the life of others more than their own needs, can be considered grassroots people. The focus of this article is on examining the atrocities faced by these underprivileged people from time to time, the obstacles they faced in their daily way of life, and the rights denied by birth through the literature that has emerged from time to time. Even in the Sangam literature, which can be portrayed as the golden age of the Tamils, there are records of the fact that the people of the lower strata were untouchables and should not be seen. Similarly, moral literature also highlights the sufferings of downtrodden people. Whoever sees inequality in the world, God does not see it. But even in devotional literature, there are caste-based devotees. From Minor Literature to Modern Literature, the life of the downtrodden is seen as a place of suffering and misery. Thus, this article proves that the lives of the lower classes are the same in the literature that reflects the society from the Sangam period to the present day.

**Keywords:** Modern Literature, Moral, Grassroots People, Underprivileged People

## முன்னுரை

நம் இந்திய நாடு பல்வேறு மொழி, மதம், சாதி என பல வேறுபட்ட மக்களை கொண்ட நாடு. இங்கு வாழும் மக்கள் யாவரும் சமம் என்னும் சட்டங்கள் தற்போது கொண்டு வரப்பட்டுவிட்டன. எனினும் இச்சட்டங்கள் கொண்டுவர நிகழ்ந்த போராட்டங்கள் ஏராளம். அப்படி கொண்டு வரப்பட்ட சட்டங்கள் யாவும் ஏட்டில் நிலையாக உள்ளனவே ஒழிய இன்றளவும் நாம் வாழும் சமூகத்திற்குள் சாதி, மத புறக்கணிப்பு இருந்து கொண்டே தான் இருக்கிறது. இப்புறக்கணிப்பைத் தமிழ்ப் படைப்பிலக்கியங்கள் காலந்தோறும் பதிவிட்டே வந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாற்றினை இலக்கியங்கள் வழி இக்கட்டுரையில் ஆராயப்பட உள்ளோம்.

## சங்க இலக்கியத்தில் அடித்தள மக்கள்

இயற்கையையும், காதலையும், வீரத்தையும் சிறப்பித்துக் கூறும் சங்க இலக்கியங்களில் பறையர் மற்றும் பார்ப்பனர் என்ற இருவகை சாதிகள் பற்றியும் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

"துடி எறியும் புலைய

எறிகோல் கொள்ளும் இழிசின"

"அறையும் மடிவாய்த் தண்ணுமைஇழிசினன்குரலே"

பறையர்களும், துடி அறைபவர்களும் சமமாய் கருதப்பட்டு இருவரும் தாழ்ந்த சாதியினராய் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தீண்டப்படாதவர்களாய் அதாவது இழிசினராய் சுட்டுகின்றனர். இவர்களது தொழில், உணவு, பழக்கவழக்கங்கள் மற்றும் பேசுகின்ற மொழி என இவையாவும் தீண்டாமைக்குரியது என்றும் கீழ்த்தரமானது என்றும் புறக்கணிக்கப்பட்டது (Puliyur kesigan, 2010).

இத்தகையவர்களுக்கு நேர்மாறாக உயர்நிலை மக்கள் என அந்தணர்கள் மதிக்கப்பட்டனர். மன்னர்களின் தனிப்பட்ட வாழ்விலும், மக்களை ஆட்சி செய்யும் பொது விவகாரங்களிலும் அந்தணர்களின் தலையீடும் ஆதிக்கமும் இருந்திருக்கிறது.

"அறு தொழில் அந்தணர்" என்றெல்லாம் சங்க இலக்கியங்களில் அந்தணர்களைப் போற்றியும் உயர்த்தியும் கூறப்பட்டுள்ளது. மன்னனுக்கு அடுத்த நிலையில் அந்தணர்களை வைத்து கொண்டாடினர் (Puliyur kesigan, 2010).

## பக்தி இலக்கியத்தில் அடித்தள மக்கள்

பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சியானது இந்தியாவில் ஏற்படுவதற்கு முன்பு, பிற மதங்களின் ஆதிக்கம் தோன்றாதக் காலத்தில் சைவம் மற்றும் வைணவம் என்ற இருவகை சமயம் வேரூன்றிய காலத்தில் மடங்களின் செல்வாக்குடன் தீண்டாமை என்னும் கொடுமை வெகுவாக நிகழ்ந்தேறியது. இதனை, "குலப் பிரிவுகளும் பிராமணரின் மேம்பாடும் வடமொழியின் ஏற்றமும் தமிழ்மொழிக் கலப்படமும் தமிழரின் சமூகத்தில் துறைகள் தோறும் ஏற்பட்டன" (Pillai, 2011). என்று, தமது நூலில் கே.கே. பிள்ளை குறிப்பிடுகிறார். பிற்காலச் சோழர்களின் பேரிலக்கியமான பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள நாயன்மார்களின் வரலாற்றினையும் நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ள ஆழ்வார்களின் வரலாற்றினையும் கூர்ந்து நோக்குகையில் இறைவனிடம் பக்திக் கொண்ட உண்மையானத் தொண்டர்களுக்கும் தீண்டாமை என்னும் பேய் இறைவனிடம் சேர்வதற்கு முட்டுக்கட்டையாய் இருந்துள்ளதை பக்தி இலக்கியங்கள் விவரிக்கின்றன.

"குலம் தாங்கு சாதிகள் நாலிலும்கீழ் இழிந்து எத்தனை

நலம் தான் இல்லாத சண்டாளர்கள் சண்டாளர்களாகிலும்

வலம் தாங்கு சக்கரத்து அண்ணல்மணிவண்ணற்க்கு ஆள் என்று உள்

கலந்தார் அடியார்க்குதம் அடியார்என் அடிகளே"

திருநாளைப்போவார் நாயனார் (நந்தனார்) சிவபெருமான் மீது உண்மையாக பக்தி கொண்டிருந்த போதிலும் தாழ்த்தப்பட்ட இனத்தில் பிறந்ததினால் இப்பிறவியில் இறைவனை அடைய வழி இல்லை என்றும், அவரது ஊன், உடல் நெருப்பினால் அழிக்கப்பட்டு உயிர் மட்டும் இறைவனை அடைந்ததாகக் கூறப்படுகிறது. சைவசமய இலக்கியத்தில் நந்தனாரின் இவ்வரலாற்றினை நன்கு ஆய்ந்து நோக்குகையில் சாதியின் காரணமாக அவர் புறக்கணிக்கப்பட்டது தெளிவாகிறது (Kamalakkannan, 2011).

பக்தி இலக்கிய காலத்தில் இசையில் வல்லோர் என போற்றப்படும் பாணர் குலத்தில் பிறந்தவர்களும் தாழ்வாகவே கருதப்பட்டனர் என்றக் கருத்தை தமது நூலில் பதிவு செய்கிறார் (Pillai, 2011).

“திருப்பாணாழ்வார் தீண்டாதார் என்று அக்காலத்தில் கருதப்பட்ட பாணர் குலத்தில் வந்தவர்” என்று கூறுவதிலிருந்து பக்தி இலக்கியக் காலகட்டத்தில் பாணர் சமூகம் பட்ட துயரங்களை அறிந்து கொள்ளலாம். இதன்வழியாக பாணர் குலத்தில் பிறந்த திருப்பாணாழ்வாரும் திருமால் மீது அதீத பக்திநெறியுடன் வாழ்ந்த போதும் கோவிலுக்குள் இவரது பாதம்பட மறுப்பு இருந்தது என்பது உண்மையாகிறது (Pillai, 2011).

## சிற்றிலக்கியத்தில் அடித்தள மக்கள்

நாயக்கர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களின் மூலமும் தீண்டாமை எனும் ஏற்றத்தாழ்வு மக்களிடம் வேரூன்றி போனதை காணமுடிகின்றது. உழவர்களின் வாழ்வை படம் பிடித்துக் காட்டும் இலக்கியமாகப் பள்ளு இலக்கியங்கள் உள்ளன. இவ்விலக்கியங்களில் உழவுத் தொழில் புரியும் பெருமக்கள் பள்ளர் என்னும் சாதியினராகவும், அவர்கள் நிலம் கொண்ட பண்ணையாளர்களுக்கு அடிமையாக இருந்ததையும் விளக்குகிறது.

“ஐயாபராக்குப்பராக்கும்மை

கும்பிட்டேனாண்டே - உம்மை

அல்லவோதேடிஅடியாளிங்

கேவந்தேன்ஆண்டே” (Puliyur kesigan, 2015)

மற்றும்,

“இசையாத வார்த்தை சொன்னாய்

என்று பண்ணை யானெழுந்து

கசையால் அடிப்பேனென்று

கண்சிவந்து கூறினனே”

என்ற வரிகள் பள்ளர்களின் வாழ்வை எடுத்துக்காட்டும் (Puliyur kesigan, 2015).

ஆண்டைக்கு அடங்கி பள்ளன் அடிமை தொழில் செய்வதும், பள்ளியை ஆண்டை கேலி பேசுவதும், இழிவான சொற்களை கொண்டு பள்ளன் பள்ளியை நிந்திப்பதும் பள்ளு இலக்கியங்கள் தோறும் காண நேர்கிறது.

தாழ்த்தப்பட்ட மலைசாதியினராய் கருதப்படும் குற மக்களுடன் மேல் சாதி மக்களை தொடர்புபடுத்தி படைக்கப்பட்ட இலக்கியம் குறவஞ்சி. இவ்விலக்கியங்களில் கடவுளையோ, அரசனையோ போற்றிப் பாடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றில் குறத்தியின் வர்ணனையை நோக்குகையில் மலைச்சாதி மக்களின் வாழ்க்கை முறையை கொச்சைப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

## நாட்டுப்புற கலைகளில் அடித்தள மக்கள்

நாட்டுப்புறக் கலைகள் யாவும் மக்களின் மன மகிழ்விற்காக ஏற்பட்டிருந்த போதிலும் சில கலைகள் உயர்சாதி மக்களுக்கு உரியது என்றும் சில கதைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரியது என்றும் இருவகை பிரிவினைகள் இருந்தது. இக்கருத்தையே டாக்டர்.சு.சக்திவேல் அவர்களும் தமது நூலில், “தொன்மை கலையை பழங்குடி மக்களிடையேயும், நாட்டுப்புறக் கலையை நாட்டுப்புற மக்களிடையேயும் செம்மை கலையை உயர்குடி மக்களிடையேயும் காணலாம்” (Sakthivel, 1983). என்று, உயர் குடிமக்களுக்கான கலைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கலைகள் என கலைகளும் பிரிந்து கிடப்பதை சுட்டுகிறார். பறையாட்டம், குறவன் குறத்தி ஆட்டம் போன்றவை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய கலைகளாகவே பார்க்கப்படுகின்றன. பறை என்னும் இசைக்கருவியை பறையர்கள் எனக்

குறிக்கப்பெறும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்கள் மட்டுமே கொட்டுவார்கள் என்றும், பறை கொட்டுபவன் பறையன் என்றும் அன்று முதல் இன்று வரை மக்கள் கருதுகின்றனர்.

இறப்பின் போதும் செய்தியைப் பரப்பும் போதும் கொட்டப்பட்ட பறையானது பின்பு பறையாட்டமாக கலை வடிவம் கொண்டது. இதனை தப்பாட்டம் மற்றும் பறையாட்டம் என்கின்றனர். எனினும் தற்போதைய காலகட்டத்தில் இக்கலை சாதிய வண்ணம் பூசாமல் பல இளைஞர்களால் கற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. கரகாட்டத்தின் துணை ஆட்டமாக ஆடப்படுவது குறவன், குறத்தி ஆட்டம் கருதப்படுகிறது. இவ்வகை ஆட்டம் தலித் மக்களால் மட்டுமே ஆடப்படுகிறது. பரதநாட்டியம் போன்ற கலைகள் உயர்சாதியினரால் ஆடப்பட்டு உயர்வுப் பெற்ற, மதிக்கப்பட்ட கலைகளாக போற்றப்படுகிறது. இதைப்போன்று கலைகளுக்கு உள்ளே அக்கலைகளை கற்றுக் கொள்ளும் மக்களை வேறுபடுத்தி காட்டும் சாதிய வேறுபாடானது மலிந்து கிடக்கிறது.

## புதின இலக்கியத்தில் அடித்தள மக்கள்

புதின இலக்கியங்களில் தலித்திய கோட்பாடுகளுடன் எழுந்தவை ஏராளம். பாரதியார், பெரியார் போன்றப் பகுத்தறிவாளர்கள் தோன்றிய பின்பு அக்காலக்கட்டத்திலும் அதற்கு முன்பும் இருந்த தீண்டாமை கொடுமைகளை தங்களது நாவல்களில் வெகுவாகப் பதிவிடத் தொடங்கினர் நாவலாசிரியர்கள்.

பூமணியின் பிறகு என்ற புதினம் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட சக்கிலியன் என கருதப்படும் செருப்பு தைக்கும் தொழிலாளியின் வாழ்வை அழகாக படம் பிடித்து காட்டுகிறது. இச்சமூகத்தினருக்கு கல்வியறிவு மட்டுமே முன்னேற்றத்தை கொடுக்க முடியும் என்பதை, “என்னமோ படிக்கிது புள்ள சீத்துவம் இருக்கிற வரைக்கும் படிக்க வைக்க வேண்டியதுதான்” என்று, புதினத்தில் அழகிரி தனது பேரன் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையும் பேரன் படித்தால் பிறகு… என்று புதினத்தை முடித்திருப்பது தலித் மக்களின் ஏக்கம் நிறைவேறுமா என்ற கேள்விக்குறியுடனே ஆசிரியர் விட்டிருப்பது சிறப்பு. இதைப் போலவே பாரதியின் ‘சங்கம்’ என்ற புதினமும் மலைவாழ் மக்களுக்கு சமவெளியில் வாழும் மக்களைப் போலவே கல்வி வாழ்வாதார தேவைகள் போன்றவை கிடைக்க வேண்டும் என்பதையும் அவர்களது, விளைப்பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கும் உரிமையை அவர்களே பெற வேண்டும் என்பதையும் முன்னிறுத்தி படைக்கப்பட்டுள்ளது. பாமாவின் ‘கருக்கு’ என்ற புதினத்தில் வாழ்வின் பல போராட்டங்களை தீண்டாமை என்னும் கொடுமையால் அடித்தள மக்கள் படும் பாட்டினை அன்றாட வாழ்க்கை சூழலுடன் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார் (Bama,1992).

“தீண்டாமைன்னு சொல்லிக்கிறத நானு மூணாங்கிளாஸ் படிக்கையில கேட்டதே இல்ல. ஆனா இப்பிடின்னா என்னன்னு பார்த்து, ஒணந்து, அனுபவிச்சு, அவமானப்பட்டிருக்கேன்” தலித்திய புதினங்கள் யாவும் தலித் மக்களின் மொழிநடையிலேயே அவர்களது வாழ்க்கை துன்பங்களையும், போராட்டங்களையும் வெளிக்கொணர்பவையாகப் படைக்கப்படுகின்றன (Bama,1992).

## முடிவுரை

உலகில் நடைபெறும் கொடுமைகளில் மிகவும் கொடுமையானது சாதிய கொடுமை. பிறப்பினால் ஒருவரை நாயை விடவும் கீழ்த்தரமாக நடத்துவது ஏற்க இயலாத அருவருக்கத்தக்க செயல். தாயின் கருவறை புனிதம் எனில் அது எந்தத் தாயின் கருவறை என்பதில் பேதம் இருக்கக் கூடாது. பறவையினங்கள், விலங்கினங்கள் போன்றவை இடம்பெயர்வு செய்தலை நாம் வலசைப் போதல் என்கிறோம். மேலும் இவற்றின் இடம்பெயர்வுகள் உணவிற்காகவும், தட்பவெப்ப காலநிலைக்காகவும் நடைபெறுகிறது. ஆனால் மனிதனின் இடப்பெயர்வுகள் வெறும் உணவு இயற்கை அழிவினைத் தாண்டி ஓர் குறிப்பிட்ட இனத்தில் பிறந்ததற்காகவே கட்டாயப்படுத்தியோ, உந்தப்பட்டோ நடைபெற்றிருக்கிறது. மனிதன் தான் தோன்றிய ஆரம்ப காலகட்டத்தில் நாடோடி வாழ்வினை மேற்கொண்டான். நாகரிக வளர்ச்சி அவனை ஓரிடத்தில் நிலைபெறச் செய்தது. ஆனால் பல உயர்தட்டு மக்களின் அடக்குமுறை காரணமாக அடித்தள மக்கள் நாடோடி வாழ்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தாழ்த்தப்பட்ட

மக்கள் காலம் காலமாக சாதியின் பெயரால் நடைபெறும் கொடுமைகளை தங்கள் சக்திக்கேற்ப போராடியும் எதிர்த்தும் வந்துள்ளனர். எனினும் இறுதியில் பயனடைந்தவர்கள் உயர் சாதியினராகவே உள்ளனர் என்பது அடித்தள மக்களின் வாழ்க்கை வரலாற்றினைப் பார்க்கும் போது புலனாகிறது. இவ்வரலாற்றினை மாற்ற புதிய விதைகளை விதைப்போம். நாளைய தலைமுறையினருக்கு மாற்றம் ஒன்றே மாறாதது.

## References

Bama, (1992) Karukku, Kalachuvadu Pathipagam, Chennai, India.

Kamalakkannan, V.R., (2011) Naalayira Divya Prabandham, Varthamanan Pathippagam, Chennai, India.

Pillai, K.K., (2011) Tamizhaga Varalaru Makkalum Panpadum, Internaional Institute of Tamil Studies, Chennai, India.

Puliyur kesigan, (2010) Purananuru, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur kesigan, (2015) Mukkudarpallu, Paari Nilaiyam, Chennai, India.

Sakthivel, S., (1983) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License